**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.**

**மார்ச்/ஏப்ரல் 2026 – பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு**

**தனித்தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்தல் மற்றும் அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் கலந்து கொள்ளுதல் தொடர்பான**

**செய்திக்குறிப்பு**

நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுத ஆன்–லைன் மூலம் விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் (தட்கல் மற்றும் சிறப்பு தட்கல் உட்பட) **25.02.2026 முதல் www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் வாயிலாக தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்தல்:**

தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று "HALL TICKET" என்ற வாசகத்தினை 'Click' செய்தால் தோன்றும் பக்கத்திலுள்ள "SSLC PUBLIC EXAMINATION MARCH/APRIL-2026 – PRIVATE CANDIDATE HALL TICKET DOWNLOAD" என்ற வாசகத்தினை "Click" செய்து தோன்றும் பக்கத்தில், தங்களது விண்ணப்ப எண் (Application Number) / நிரந்தரப் பதிவெண் (Permanent Register Number) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து, தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**அறிவியல் பாட செய்முறைத்தேர்வில் கலந்து கொள்ளுதல்:**

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு அறிவியல் பாட செய்முறைத் தேர்வுகள் (Science Practical Examinations) **26.02.2026 முதல் 28.02.2026 வரை** அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புகள் நடைபெற்ற பள்ளிகளிலேயே நடைபெறவுள்ளன. அறிவியல் பாட செய்முறைத்தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தை தனித்தேர்வர்கள் செய்முறைப் பயிற்சி மேற்கொண்ட பள்ளித் தலைமையாசிரியர் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களை அணுகி அறிந்துக்கொள்ள வேண்டும். தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுடன் தவறாமல் கலந்து கொண்டு செய்முறைத் தேர்வெழுதிட அறிவிக்கப்படுகிறார்கள். உரிய தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் செய்முறைத் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் :** சென்னை – 6
**நாள் : 24.02.2026**